(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 ஒக்டோபர் 15 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 நவெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தான —

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்துக்காக —

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கருவிகள் யாவையென்பதையும்;

(iv) பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இணையத்தின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிராமிய பிரதேசங்களில் வாழ்வோருக்குக்கும் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், அதற்கான போதிய அறிவு வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இவ்வறிவினை முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

100/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மக்களின் சட்டப் பிரச்சனைகளுக்குத் துரிதமாக தீர்வு காண்பதற்கும், சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் ஒரு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்துக்கு குறைந்த பட்சம் தலா ஒரு சட்டத்தரணியை பொலிஸ் வழக்குகளை கையாளும் உத்தியோகத்தராக (Prosecutor) குறிப்பிட்ட நியாயாதிக்கப் பிரதேசத்திற்காக நியமிப்பதன் மூலம் இலங்கைப் பொலிஸிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதிக பயனடைவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி புதிய பதவியினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

149/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு கலவன் தேசிய பாடசாலையாகிய குடாபுத்கமுவ ஸ்ரீ இராஜசிங்க வித்தியாலயத்தில் கல்விசார் பணியாட்டொகுதியில் வரலாறு, குடியியற் கல்வி, நாடகமும் அரங்கியலும், ஆகிய பாடங்களுக்கு 02 ஆசிரியர்கள் வீதமும், தமிழ் மொழி, சித்திரக் கலை, தகவல் தொழில்நுட்பம், ஊடகக் கல்வி, பௌதிகவியல், விவசாயம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், கணக்கீடு, தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை, பௌத்த நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு 01 ஆசிரியர் வீதமும் மாணவர்களுக்கான உளவள ஆலோசனை, ஆசியர்களுக்கான நூலகர் ஆகிய ஏதுவான பதவிகளில் 01 வெற்றிடம் வீதமும் வெற்றிடங்கள் நிலவுகின்றதென்பதையும்;

(ii) கல்விசாரா பணியாட்டொகுதியிலும், துப்பரவேற்பாட்டு தொழிலாளர், பூங்கா பணிகளுக்கான தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிலாளர் ஆகிய பதவிகளில் 02 வெற்றிடங்கள் வீதமும் விஞ்ஞானக் கூட உதவியாளர் பதவியில் 03 பதவி வெற்றிடங்களும் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 01 வெற்றிடமும் நிலவுகின்றதென்பதையும்;

அவர்அறிவாரா?

(ஆ) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு கொண்டுள்ள திட்டங்களையும் இவ் வெற்றிடங்களை நிரப்புகின்ற திட்டவட்டமான திகதிகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

190/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையிலுள்ள கிரிக்கட் விளையாட்டு சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 25 கிரிக்கட் சங்கங்கள் உள்ளன என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்காமைக்கு;

(ii) பதிவைக் கோரி கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கம் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்தும் இற்றை வரையில் பதிவு செய்யாமைக்கு;

காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கத்திற்காக விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உதவிகள் யாவை என்பதையும் அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

252/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள ஹந்தானை தோட்டமானது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டமொன்றாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 முதல் 2015 வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டிடங்கள் வெளித் தரப்பினர்களுக்கு/தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

414/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது, விளக்கமறியல் இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், பொறுப்பேற்கும இல்லங்கள் மற்றும் தடுப்புக்காவல் இல்லங்கள் ஆகியவற்றில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக -

(i) சிறுவர் ஒருவரின் தங்கியிருக்கும் சராசரி காலப்பகுதியையும்;

(ii) சிறுவர் ஒருவருக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களின் வகுதிகள் மற்றும் அடிப்படைத் தகைமைகளையும்;

(iv) பணியாட்டொகுதியினர் – சிறுவர் விகிதத்தினையும்;

(v) சிறுவர்களை சமூகத்தினுள் மீள் ஒன்றிணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(vi) இந்த சிறுவர்களின் நலன்களை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(vii) இந்த நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2015 முதல் 2019 வரையான காலப்பகுதி தொடர்பாக –

(i) மேலே தரப்பட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் அனுமதி பெற்ற மற்றும் விலகிச் சென்ற;

(ii) விலகிச் சென்று வெற்றிகரமாகத் தொழில் பெற்று சமூகத்தில் பாதுகாப்பாக வாழுகின்ற;

சிறுவர்களின் எண்ணிக்கையை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

420/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அநேகமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்ற "விசல் தம்புள்ள" நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படவுள்ள கலேவெல மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரவுகளில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளின்பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படுவதில் உள்ளடக்கப்படாத பல கிராம அலுவலர் பிரிவுகள் கலேவெல மற்றும் தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படாத கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அக்கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அக்கிராமங்களுக்கும் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கென மாற்றுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

428/2020

கௌரவ சாந்த பண்டார,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நாளாந்த மின்சார நுகர்வு அண்ணளவாக யாது;

(ii) மேற்படி தேவைக்கான மின்சாரப் பிறப்பாக்கம் மேற்கொள்ளப்படும் மூலங்கள் யாவை;

(iii) தேசிய மின்சக்தி முறைமைக்காக மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சாரம் சதவீதமாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2021 ஆம் ஆண்டாகும் போது அரசாங்கத்தின் இடையீட்டுடன் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சாரம் 2025 ஆம் ஆண்டு வரை போதுமானதா;

(ii) இல்லையெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

452/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவ நகரில் நீண்ட காலமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வசித்து வருகின்ற வர்த்தகர்களின் காணிகள் மற்றும் மக்களின் காணிகளுக்கு உறுதிகள் கிடைக்காத காரணத்தினால் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதெனபதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

484/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற நீர்ப்பாசனத் திட்ட முறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசனத் திட்ட முறையினூடாகவும் உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்ப்பாசனத் திட்ட முறைகளை அண்மித்தாக தமது வாழ்வாதாரத்தை அமைத்துக்கொள்கின்ற மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

492/2020

கௌரவ நிரோஷன் பெரேரா,— வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தில், வனாதவில்லுவ, எழுவன்குளம் பிரதேசத்தில் காடொன்று தீ வைக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக ஊடகத்தில் வெளியாகியமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அழிவு இடம்பெற்றுள்ள நிலப்பரப்பின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகளின் உரிமை அரசாங்கம் வசமுள்ளதா;

(iii) இன்றேல் மேற்படி காமணிகளின் உரிமையினைக் கொண்டுள்ள தரப்பினர்கள் யார்;

(iv) மேற்படி காடு அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா;

(v) இந்நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

507/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரசியல் அடிப்படையில் சமுர்த்தி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக தகைமை பெற்ற பெருமளவிலானவர்களுக்கு மேற்படி உதவித்தொகை கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) "சுபீட்சத்திற்கான நோக்கு" கொள்கை பிரகடனத்தின் படி சமுர்த்தி உதவித் தொகை கிடைக்கப் பெறாதவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) சமுர்த்தி உதவித் தொகையின் பெறுமதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எவ்வித பதவியுயர்வும் கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பதவியுயர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் சமுர்த்தி திட்டத்தினதும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சரவை பத்திரங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) இற்றைவரையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

524/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

(iii) இன்றளவில் பதில் கடமையாற்றும் அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

105/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2017.01.01 முதல் 2019.01.01 வரையில் —

(i) மேற்கொள்ளப்பட்ட செயற்கை கள்ளு சுற்றுவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) மேற்குறிப்பிட்ட காலத்தில் கைப்பற்றப்பட்ட செயற்கை கள்ளு லீற்றர்களின் அளவு;

(iii) மேற்படி சுற்றிவளைப்புக்களில் அறவிடப்பட்ட அபராதத்தின் பெறுமதி;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சில கள்ளு உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவினையும்விட களஞ்சிய வசதிகளை பேணி வருகிறார்கள் என்பதையும்;

(ii) அவர்கள் செயற்கை கள்ளு உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(iii) விசேட அதிரடிப்படை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு இச்செயற்கைக் கள்ளினை கைப்பற்றியபோதிலும், சில மதுவரி உத்தியோகத்தர்கள் அவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது, தொழில்நுட்ப கோளாறுகளாக சுட்டிக்காட்டி, தீர்வுக் கட்டணத்துக்கு உட்படுத்தி குற்றவாளிகளை விடுதலை செய்வதாகவும்;

(iv) செயற்கை கள்ளினை உற்பத்தி செய்வதானது தொழில்நுட்பக் கோளாறல்ல, மாறாக அது சில மதுவரி உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே இந்த உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் நடவடிக்கையே என்பதையும்;

(v) அதனால் அரசாங்கம் அதிகளவிலான வரி வருமானத்தை இழக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) செயற்கை கள்ளு உற்பத்தியை நிறுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

160/2020

கௌரவ. எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்ல குப்பை மேடு அமைந்துள்ள நிலப்பிரதேசத்தை ஒரு நகரப் பூங்காவாக மாற்றியமைப்பதற்கான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி இற்றைவரை நிறைவு செய்யப்பட்டுள்ள பணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) நிறைவுசெய்வதற்கு எஞ்சியுள்ள பணியின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

191/ '20

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி, நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்குப் பத்து ஆண்டுகள் கடந்துள்ளபோதும், அந்த மைதானத்தை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டுக்காக இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு மைதானமா; இன்றேல் மாவட்ட மட்டத்திலான விளையாட்டு மைதானமா என்பதையும்;

(ii) விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையில் கடந்த பத்து வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தக்கார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்ற தற்போதைய ஒப்பந்தக்காரரின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம், மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் செயற்பாடுகளுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(ii) மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

217/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாசிப்பயறின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி பாசிப்பயறை இறக்குமதி செய்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு பாசிப்பயறை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

255/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள போபிட்டிய தோட்டம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான தோட்டம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கம் வசமிருந்த தோட்டங்களை மறுசீரமைப்புச் செய்த போது இத்தோட்டத்திற்கு சொந்தமாயிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தோட்டத்தில் முழுமையாக பயிர்செய்கை மேற்கொண்ட நிலப்பகுதியின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் 2015 ஆம் ஆண்டளவில் கைவிடப்பட்ட பிரிவுகள் உள்ளனவாவென்பதையும்;

(v) அவ்வாறாயின், அப்பிரிவுகளின் மொத்த நிலப் பகுதியின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பார?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இத்தோட்டத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் வெளித்தரப்பிற்கு/ தனியார்துறைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இறுதியாக மேற்கொண்ட காணி கணிக்கீட்டுக்கு அமைவாக பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகள் மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் அளவு யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

429/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் பொலிசாரால் அளப்பரிய சேவை நிறைவேற்றப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதெனபதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அளவ்வ பொலிஸ் நிலையத்தினை நவீனமயப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனின், அதற்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

485/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஸ்தாபிக்கபட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு யாது என்பதையும்;

(iv) தனியார் துறையின் வியாபாரிகளினால் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதை தவிர்க்கும் பொருட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையை வலுவூட்ட அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 நவெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

60/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனமானது கிரிக்கெட் பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) கண்டிப் பிரதேசத்தில் அதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்காக பணம் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மேற்படி காணிக் கொள்வனவின்போது பாரிய நிதி மோசடி நடந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

106/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கள்ளு உற்பத்திக் கைத்தொழில் வியாபித்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019.12.31 ஆம் திகதியளவில் இலங்கையில் உரிமம் பெற்ற கள்ளு உற்பத்தியாளர்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொர் உற்பத்தி ஆலைக்கும் ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு வரையறை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அந்த அளவுகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கள்ளு உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனோம்புகைக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

166/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகள் எத்தனை உள்ளன;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் உள்ளதா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

218/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கௌப்பியின் அளவு;

(ii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை;

(iii) எந்த நாடுகளில் இருந்து கௌப்பி இறக்குமதி செய்யப்பட்டது;

(iv) கௌப்பி இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலங்கைக்கு கௌப்பி இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கிரேட்வெலி தோட்டம், கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரவில் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய தோட்டம் என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டிடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு/தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

350/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இது வரையில் காணப்படுகின்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி தொடக்கம் பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலும் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி தெடக்கம் சிரேஷ்ட பிரதிப் பொாலிஸ்மா அதிபர் வரையிலான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்காக அண்மைக் காலமாக காலவாய்ப்பான பதவியுயர்வு களை வழங்குகையில் பின்பற்றபட்ட முறையியல் யாது என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான பதவி உயர்வுகளை வழங்குகையில் குறித்த பதவிகளுக்காக இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக அண்மையில் காலவாய்ப்பான பதவியயர்வுகளை வழங்குகையில், குறித்த பதவிகளில் இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கையினை கவனத்தில் கொள்ளாது அதனை விஞ்சியதாக இரண்டரை வருட சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(vi) பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி வரையில் காலவாய்ப்பான பதவியுயர்வு வழங்குகையில் மேற்படி (v) இல் கூறப்பட்ட முறையியலைப் பின்பற்றாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

415/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் தொடர்பாக நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இளம் தவறாளிகள் மற்றும் சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து வழக்குகளை முடிவுறுத்துவதற்கு சராசரியாக எடுக்கும் கால அளவினையும்;

(iii) தாமதத்துக்கான காரணங்கள் மற்றும் தாமதங்கள் எங்கு இடம்பெறுகின்றன என்பதையும் வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளையும்;

(iv) நீதிமன்றங்களுக்கு சிறுவர்களை கொண்டுசெல்வதற்கு நடைமுறையில் உள்ள ஏற்பாடுகளையும்;

(v) சிறுவர்கள் நீதிமன்றங்களில் பிரசன்னமாக இருக்கும்போது, அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்பேணல் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுகள் வரையான வருடங்கள் தொடர்பான இளம் தவறாளிகளின் —

(i) முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) முறைப்பாடு பதியப்பட்டதிலிருந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் வரையும் மற்றும் குற்றச்சாட்டு வாசிக்கப்பட்டதிலிருந்து விசாரணையின் முடிவு வரையுமான கால அளவையும்;

(iii) குற்றத் தீர்ப்புகள், விடுதலைகள் மற்றும் விடுவிப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும்;

அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

421/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அநேகமான வேலைகள் பூரத்தி செய்யப்பட்டு வருகின்ற “விசல் மாத்தளை” நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படவுள்ள உக்குவெல, இரத்தோட்டை, மாத்தளை, யட்டவத்த, மற்றும் பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படுவதில் உள்ளடக்கப்படாத பல கிராம அலுவலர் பிரிவுகள் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுவதை அவர் அறிவாரா;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படாத கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அக்கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அக்கிராமங்களுக்கும் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கென மாற்றுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

430/2020

கௌரவ சாந்த பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் வடமேல் மாகாணத்தில் தெதுருஓயா கருத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள /செலவிடப்படும் தொகை எவ்வளவு;

(ii) கருத்திட்டத்திற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவை;

(iii) கருத்திட்டத்திற்காக காணிகளை நன்கொடையளித்த குடும்பங்களின் எண்ணக்கை எத்தனை;

(iv) மேற்படி குடும்பங்களுக்கு போதிய நட்டஈடு செலுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா;

(v) மேற்படி குடும்பங்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவவளவு;

(vi) இதுவரை நட்டஈடு செலுத்தப்படாதுள்ள குடும்பங்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

453/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகப் பிரவின் 215 ஆம் இலக்க திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் பம்பரஎல கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் சேனைப் பியிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் அறுதி உறுதிகளுடன் கூடிய காணிகளுக்கு வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள் பிரவேசித்து ஒதுக்க எல்லைகளை அடையாளமிட்டு எல்லைக் கற்கள் இட்டுள்ளனர் என்பதை அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

517/20

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழிலில் சுருக்கு வலையை பயன்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், மீனவர்கள் இதனை உரிய வகையில் பயன்படுத்தாமையினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்கரை அண்மித்த பிரதேசங்களில் மீன்பிடிக்கும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதெனவும்;

(ii) இதனை கட்டுப்படுத்துவது மிகச் சிரமமாக இருப்பதால் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது கட்டாயமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடைமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

525/2020

கௌரவ றோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி விளையாட்டு பாடசாலைகளை மேற்கொண்டும் முன்னேற்றுவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

559/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அவற்றின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) பணிகள் நிறைவு செய்யப்படாத கட்டடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் அக் கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு காரணமான விடயங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

607/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு வழங்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை பெறுவதற்கு விண்ணப்பித்து இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவை ரூ.2000.00 இலிருந்து ரூ 2500.00 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) வெளிநாட்டு யாத்திரைகளுக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வேலைத்திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனை ஒருங்கிணைக்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 நவெம்பர் 06, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

61/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் பதவிகளை வகித்த / வகிக்கின்ற நபர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அக்காலப் பகுதியில் ஒவ்வொரு நபரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) அத்தகைய உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களால் இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்குக் கிடைத்த பயன்கள் யாவை என்பதையும்;

(v) அவ்வாறான ஏதேனும் பயன் பெற்றிருப்பின், அது தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

108/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் திரிபோஷ துணை போசணை போதியளவிலும் ஒழுங்குமுறையாகவும் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) சிறுவர் மந்தபோசணை கணிசமானளவு காணப்படுவதற்கு இவ்விடயமும் காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) இதன் காரணமாக பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது, ஆண்டுக்கான திரிபோஷ உற்பத்திக் கொள்ளளவு எத்தனை கிலோகிராம் என்பதையும்;

(ii) ஓராண்டின் நுகர்வுக்காக எத்தனை கிலோகிராம் திரிபோஷ தேவைப்படுகின்றதென கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) நாட்டின் தேவைக்கு போதுமானளவு திரிபோஷ உற்பத்திசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்படியென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

167/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் காணி உரித்துக்கள் அற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது?

(ii) மேற்படி வீடுகளிற்கு உரித்துக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் என்ன;

என்பன பற்றி இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பெருந்தெருக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் நான்காவது கட்டத்தின் (குருணாகல்-தம்புள்ளை) தற்போதைய நிலைமையை இச்சபையில் அறிவிப்பாரா;

(ii) மேற்படி கருத்திட்டம் காரணமாக ஆதனங்களை இழந்தவர்களுக்காக செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை இன்றளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதனை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தால் விகாரைகளுக்குச் சொந்தமான ஆதனங்களை அனுபவிப்பவர்கள் இழக்கின்ற ஆதனங்களுக்கென இழப்பீடு வழங்கப்படும் விதம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்திற்காக இழப்பீடு செலுத்தும் போது —

(i) காணிக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்படும் சதவீதம் யாது;

(ii) அபிவிருத்திப் பெறுமதிக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்படும் விதம் யாது;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

431/2020

கௌரவ சாந்த பண்டார,— பெருந்தெருக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதையும்;

(ii) அந்த அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அளவ்வ மற்றும் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கப்படுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த சாலை நிர்மாணிப்பதற்காக மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிக்கப்புகளுக்கென நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்கத்திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

489/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுமுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தேசிய பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஆகக் குறைந்த எண்ணிக்கையான தேசிய பாடசாலைகளைக் கொண்ட மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

500/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கிராமங்களுள் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அக் கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராமங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

518/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1973 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக செயலற்று காணப்படும் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் திணைக்களத்தின் மட்டகளப்பு மாவட்ட அலுவலகத்தை அண்மித்து நிறுவப்பட்டுள்ள ஐஸ் தொழில்சாலையை மீண்டும் புனரமைத்து இயக்க வேண்டுமெனவும்;

(ii) இதன் மூலம் மீனவப் படகுகள் மற்றும் கரைவலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுவரும் உள்நாட்டு மீனவர்களுக்கு நன்மை ஏற்படும் என்பதோடு இவர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுமென்பதையும்;

(iii) இங்கு காணப்படும் களஞ்சிய வசதிகள் காரணமாக போதனா வைத்தியசாலைக்கும் வேறு நிறுவனங்களுக்கும் தேவையான கடலுணவை களஞ்சியப்படுத்தி விநியோகிக்க முடியுமெனவும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஐஸ் தொழில்சாலையை புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

521/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்காக உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டனரா;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை யாது என்பதையும்;

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் புள்ளி வழங்கும் முறையானது திருத்தப்பட்டதா;

(iv) அவ்வாறு உரிய முறையில் திருத்தப்படுவது பொருத்தமானதா;

(v) மேற்படி முறை திருத்தப்பட்டமை தொடரப்பாக விண்ணப்பதாரிகள் விழிப்பூட்டப்பட்டனரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் விண்ணப்பித்திருந்த உத்தியோகத்தர்களின் மூப்புரிமைப் பதிவேடு முற்தேதியிடப்பட்டதா?

(ii) ஆமெனில், அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறு முற்தேதியிடப்பட்டதன் அடிப்படை யாது;

(iv) அதன் பின்னர், எதுவித அறிவித்தலோ விளக்கமளித்தலோ இன்றி நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதா;

(v) நேர்முகப பரீட்சையின் தற்போதைய நிலைமை யாது;

(vi) நேர்முகப் பரீட்சை எதிர்காலத்தில் நடத்தப்படுமா;

(vii) ஆமெனின், அத்திகதி யாது;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் பதிற் கடமை புரிவதற்காக பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா?

(ii) ஆமனில் அக்கடமைகள் யாவை?

என்பதை மேலதிகமாகவும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

526/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் இன்றளவில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

608/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க முதியோர் இல்லங்கள் தொடர்பில் ஒழுங்குறுத்தல் மேற்கொள்கிறதா என்பதையும்;

(ii) மேற்படி இல்லங்கள் தொடர்பில் தரநியமங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அவ்வாறு தரநியமங்களுடன் இயைபுறாத முதியோர் இல்லங்களை நவீனமயப்படுத்த முதியோர் இல்லங்களை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் இயங்கி வரும் முதியோர் இல்லங்களில் அரசாங்கம், தனியார் துறை மற்றும் அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து நடத்திச் செல்லும் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

639/2020

கௌரவ ரஊப் ஹகீம்,— வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் நிலப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு பூரத்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை;

(ii) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இதுவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) மேற்படி ஒவ்வொரு வனப் பிரதேசமும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதி, அதில் உள்ளடங்கும் நிலப்பரப்பு மற்றும் தொடர்புடைய வரைபடங்கள் அனைத்தும் பற்றிய விபரங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்ட வாரியாக தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

716/2020

கௌரவ யதாமிணீ குணவர்தன,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் வழக்குத் தீர்ப்புகள் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இலங்கை அரசியலமைப்பின் 24 (1) உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளை சிங்கள மொழியிலும் வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 19/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/2020

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையினை பெருந்தோட்டத் துறையில் ஒழுங்குமுறைப்படுத்துதல்,— இலங்கையினுள் தபால் சேவையானது விரிவாக்கப்பட்டிருப்பினும் இன்றளவிலும் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மக்களுக்கான தபால் சேவைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாததால் அவர்கள் பலவிதமான சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாலும், சுமார் நூற்றி ஐம்பது வருடங்கள் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மேற்படி மக்களுக்கான தபால் சேவையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2020

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அங்கீகரித்தல்,— இலங்கை வரலாற்றில் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்குகின்ற மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை சனநாயகப் போராட்டங்கள் ஊடாக வென்றெடுத்துள்ளதால், அவ்வாறான போராட்டங்களில் உயிர் நீத்த தொழிற்சங்க வீரர்களை பொதுவான நாளொன்றில் நினைவுகூர வேண்டுமென்ற இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மலைநாட்டு மக்களின் நீண்ட கால கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு அதன் பிரகாரம் சனவரி 10 ஆம் திகதியன்று மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2020

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்திலுள்ள தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல்,— குருநாகலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பிரதேசங்களில் தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் காணப்படுவதால், எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாப்பதற்கு துரித வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2020

கௌரவ எச். நந்தசேன,— வன எல்லைகள் விரிவாக்கப்படுவதன் விளைவாக விவசாயிகள் பல வருடங்களாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்திய காணிகளை அவர்கள் இழக்க நேரிடுவதால் ஏற்படும் பாதக நிலையை தடுத்து நிறுத்துதல்,— வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள 2001.08.10 ஆம் திகதிய 5/2001 ஆம் இலக்கமுடைய சுற்று நிருபத்தினை அடிப்படையாகக் கொண்டு வன எல்லைகளை விரிவாக்கும் போது நீண்டகாலமாக பயிர்செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட விவசாயக் காணிகள் வன எல்லைகளுக்கு உள்வாங்கப் படுவதால் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற விதத்தில் பணியாற்றியுள்ளதாலும், இப்பாதக நிலைக்கு முகம் கொடுத்துள்ள அப்பாவி விவசாயிகளுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 37/2020

கௌரவ எச். நந்தசேன,— அரச பாடசாலைகளில் 15 வருடங்களுக்கு மேலாக கற்பித்தல் பணிகளில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் பயிற்சியினை வழங்கி ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்துக்கொள்ளுதல்,— பயங்கரவாதத் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த காலகட்டத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த கிராமங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகளில் பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதன் காரணமாக இன்று வரை, பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அத்தகைய உத்தியோகத்தர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளதாலும், வடமத்திய மாகாணத்தின் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2020

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவமொன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாகும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.43/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவு செய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களைளில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையியொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆசிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்ததினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர்

மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் ஆபரண துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட “சிலோன் ஸ்பைசஸ்” என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,—இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிகளினுடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றம் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.